**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

8040890

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை

~~(Under Section 154 Cr.P.C.)~~ "Under Section 173 BNSS"
~~(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)~~

1. District : மாவட்டம் செங்கல்பட்டு PS: காவல்நிலையம் V&AC செங்கல்பட்டு Year: ஆண்டு 2024 FIR No. மு.த.அ. எண் 05/AC/CGP Date: நாள் 14/12/24

2. (i) Act சட்டம்: BNSS Sections பிரிவுகள்: 106

   (ii) Act சட்டம்: PC ACT AMENDMENT-2018 Sections பிரிவுகள்: 7, 7A

   (iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்: —

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : —

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 13/12/24 Date to : நாள் வரை 14/12/24

   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 15.35 Time to : நேரம் வரை 01.00

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 14/12/24 Time நேரம் 06.00 HRS

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 14/12/24 Time நேரம் 06.00 HRS

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 21 KM வடக்கு

   Beat Number : முறைக் காவல் எண்

   (b) Address : முகவரி சார்பதிவாளர் அலுவலகம், கூடுவாஞ்சேரி, செங்கல்பட்டு மாவட்டம்

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு. K. வீரமணி

   (b) Father's/ Husband's Name : தந்தை / ~~கணவர்~~ பெயர் திரு. கலியமூர்த்தி

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 29/12/1975

   (d) Nationality : நாட்டினம் இந்தியன்

   (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —

   Date of Issue : வழங்கப்பட்ட நாள் —

   Place of Issue : வழங்கப்பட்ட இடம் —

   (f) Occupation : தொழில் தனி வட்டாட்சியர் (நி.வ)

   (g) Address : முகவரி நெடுஞ்சாலை நகர் அலகு-4 செங்கல்பட்டு

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   1) Tr. V. Vaithiyalingam A4b S/o Velayutham, SUB REGISTRAR - GRADE-I, GUDUVANCHERRY.
   2) Tr. S. Saravanan A39 S/o Swaminathan, 2/52, 9th Street, Ragava Nagar, Madipakkam, Chennai-91
   3) P. Vimalanathan A53 S/o Parthasarathy No:16, Kanniyappan Nagar Guduvancherry

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   - தாமதமில்லை.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)
— 4,62,200/-

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு 4,62,200/=

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் இல்லை

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு
[signature] 14/12/2024

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
[signature]

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
14/12/24 / 07.00 Hrs

Name: பெயர் S. SARAVANAN
Rank: நிலை D.S.P .........No. எண் .........

Deputy Superintendent of Police
Vigilance and Anti - Corruption
Chengalpattu - 603 001.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

**FIR வரிசை எண் 12-ன் தொடர்ச்சி**

இன்று 14.12.2024-ம் தேதி காலை 06.00 மணிக்கு செங்கல்பட்டு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவில் ஆஜராகி திரு.K.வீரமணி. தனி வட்டாட்சியர் (நி.எ). நெடுஞ்சாலைகள் அலகு-4. செங்கல்பட்டு என்பவர் கொடுத்த புகார் மனுவின் விபரம் பின் வருமாறு.

நாள் 14.12.2024 அனுப்புநர். திரு.K.வீரமணி. தனி வட்டாட்சியர் (நி.எ). நெடுஞ்சாலைகள் அலகு-4. செங்கல்பட்டு. பெறுநர். காவல் துணை கண்காணிப்பாளர். ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு. செங்கல்பட்டு. அய்யா. பொருள்: இருதுறை திடீர் கூட்டாய்வு - காஞ்சிபுரம். செங்கல்பட்டு மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களின் ஆய்வுக்குழு மற்றும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு - கூடுவாஞ்சேரி சார்-பதிவாளர் அலுவலகம் - 13.12.2024-ந்தேதி திடீர் கூட்டாய்வு மேற்கொள்ளப்பட்டது - தொடர்பாக. பார்வை: திடீர் கூட்டாய்வு சோதனையின் செயல்முறைகள். ந.க.எண்.269-2024-அ. நாள் 13.12.2024. செங்கல்பட்டு மாவட்டம். கூடுவாஞ்சேரி சார்பதிவாளர் அலுவலகத்தில். ஆவண பதிவிற்கு வரும் நபர்களிடமிருந்து லஞ்சமாக பணம் வசூலிப்பதாக தொடர்ந்து கிடைத்த தகவலின் அடிப்படையில். ரகசியமாக கண்காணிக்கப்பட்டதில் அவ்வாறு தெரிய வரவே செங்கல்பட்டு மாவட்டம். கூடுவாஞ்சேரி சார்பதிவாளர் அலுவலகத்தில். செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) அவர்களின் செயல்முறைகள் முன்னிலை திரு.சே.காஜா சாகுல் உறமீது ந.க.எண்.1136-2024-அ1 நாள் 13.12.2024-ன்படி K.வீரமணி. தனி வட்டாட்சியர் (நி.எ). நெடுஞ்சாலைகள் அலகு-4. செங்கல்பட்டு ஆகிய என் தலைமையில். செங்கல்பட்டு மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர். காவல் ஆய்வாளர் மற்றும் செங்கல்பட்டு விஜிலென்ஸ் போலீசார் சகிதம் இரு துறை திடீர் கூட்டாய்வு 13.12.2024-ம் தேதி மாலை சுமார் 3.35 மணி முதல் 14.12.2024 அதிகாலை 01.00 மணி வரை மேற்கொள்ளப்பட்டது. இந்த திடீர் கூட்டாய்வின் போது கூடுவாஞ்சேரி சார்பதிவாளர் அலுவலகம் முழுவதும் சோதனை மேற்கொண்டதில் தனி நபர்கள் 1) திரு.S.சரவணன். வ/39 த/பெ. சுவாமிநாதன். 2/52 9 வது தெரு. ராகவா நகர். மடிப்பாக்கம். சென்னை-91 என்பவரிடமிருந்து ரூ.1.65.200/- 2) திரு.பா.விமலநாதன். வ/53 த/பெ பார்த்தசாரதி. எண்.16 கன்னியப்பன் நகர். கூடுவாஞ்சேரி என்பவரிடமிருந்து ரூ.2.00.000/- ஆக மொத்தம் ரூ.3.65.200/- கைப்பற்றப்பட்டது. இது குறித்து தனி நபர்களிடம் விளக்கம் கேட்டபோது. முன்னுக்குபின் முரணாகவும். சரியான விளக்கம் கூறாததாலும் மேற்படி பணம் கூடுவாஞ்சேரி சார்பதிவாளருக்கு லஞ்சமாக கொடுக்க கொண்டு வந்த பணம் என கருதி விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும். Data Entry Operator திருமதி.பிரபாவதி என்பவரின் இருக்கைக்கு எதிரில் உள்ள கேபின் வெளியில் இருந்து தரையில் கண்டெடுக்கப்பட்ட கணக்கில் வராத பணம் ரூ.60.000/-. மேலும் சார் பதிவாளர்

இருக்கைக்கு எதிரே வலது புறத்தில் உள்ள திரு.பிச்சைமுத்து என்பவரது அறைக்கு ஒட்டியவாறு தெற்கு நோக்கி செல்லும் நுழைவாயிலுக்கு ஒட்டியவாறு கிழக்கு பார்த்தவாறு இருந்த Dining Hall-ல் முன் பக்கம் இருந்த குப்பை தொட்டியில் கண்டெடுக்கப்பட்ட கணக்கில் வராத பணம் ரூ.37,000/- ஆக மொத்தம் ரூ.97,000/- கண்டெடுக்கப்பட்டது. இது குறித்து கூடுவாஞ்சேரி சார்பதிவாளர் மற்றும் அலுவலக அலுவலர்களிடம் கேட்டபோது தங்களுக்கு எதுவும் தெரியாது என்றும் மேலும் தனி நபர்கள், சார்பதிவாளர் மற்றும் அலுவலக அலுவலர்கள் யாரும் உரிமை கோராததாலும் மேற்படி பணம் சார் பதிவாளருக்கு லஞ்சமாக கொடுக்க கொண்டு வந்த பணம் என கருதி விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. ஆக கூடுதல் ரூ.4,62,200/- (ரூபாய் நான்கு இலட்சத்து அறுபத்து இரண்டாயிரத்து இருநூறு மட்டும்) விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இது பற்றிய விளக்கம் செயல்முறை ஆணையில் உள்ளது. மேலும், தனி நபர்கள் மற்றும் அலுவலக ஆஜரில் இருந்த அலுவலர்களிடமிருந்து பெறப்பட்ட விளக்க கடிதங்கள் மேலும் தனி நபர்கள் தொடர்பான பதிவிற்கு உட்படுத்திய ஆவணங்கள் அவர்கள் ஒப்படைத்த ஆவணங்கள் மற்றும் அலுவலக பதிவேடுகளின் சான்றொப்பமிட்ட நகல்கள், செயல்முறை ஆணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய அலுவலக ஆவணங்கள் அனைத்தையும் இத்துடன் இணைத்து தங்களிடம் விசாரணைக்காக ஒப்படைக்கிறேன். இது குறித்து சட்டப்படியான நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தெரிவித்துக்கொள்கிறேன். (ஓம்) (K.வீரமணி), தனி வட்டாட்சியர் (நி.எ), நெடுஞ்சாலைகள் அலகு-4, செங்கல்பட்டு. இணைப்பு, 1) கைப்பற்றப்பட்ட பணம் ரூ.4,62,200/-, 2) திடீர் கூட்டாய்வு சோதனையின் செயல்முறைகள். 269-2024-அ, நாள் 13.12.2024, 3) பணம் கைப்பற்றபட்ட 2 தனி நபர்களின் விளக்க கடிதம் மற்றும் அதனுடன் இணைக்கப்பட்ட நகல்கள். 1) திரு.சரவணன் (2 தாள்கள்), 2) திரு.விமலநாதன் (7 தாள்கள்). 4) அலுவலகம் ஆஜரில் இருந்த 21 தனி நபர்களின் விளக்க கடிதம் மற்றும் அதனுடன் இணைக்கப்பட்ட நகல்கள் (21 தாள்கள்) 1) திரு.செந்தில் (1 தாள்), 2) திரு.குமரேசன் (1 தாள்), 3) திரு.கிருபாகரன் (1 தாள்), 4) திருமதி.சுகுணா (2 தாள்கள்), 5) திருமதி.கீதா (2 தாள்கள்), 6) திருமதி.சுமங்கலி (1 தாள்), 7) மகாலட்சுமி (1 தாள்), 8) திரு.மகேஸ் வீரன் (2 தாள்கள்), 9) திரு.ராஜசேகர் (2 தாள்கள்) 10) திரு.வெங்கடேஷ் (1 தாள்), 11) திரு.ஆன்ரூ (1 தாள்), 12) திரு.பழனி (2 தாள்கள்), 13) திரு.அரவிந்தன் (2 தாள்கள்), 14) திரு.சாதிக் பாட்சா (2 தாள்கள்), 15) திரு.அந்தோனி அருளப்பன் (2 தாள்கள்), 16) திருமதி.சரண்யா ராணி (1 தாள்), 17) திரு.ஜான் பாலன் கென்னடி (1 தாள்), 18) திரு.சுந்தரமூர்த்தி (2 தாள்கள்) 19) திரு.பாலு (2 தாள்கள்), 20) திரு.அப்துல் ஜப்பார் (2 தாள்கள்) மற்றும் 21) திரு.ஏழுமலை (2 தாள்கள்) 5) அலுவலக ஊழியர்கள் 7 நபர்கள் கைப்பட எழுதி கொடுத்த விளக்க கடிதம், 1) திரு.வைத்தியலிங்கம், (1 தாள்) 2) திரு.மதன் குமார் (1 தாள்), 3) திருமதி.அபிராமி (1 தாள்), 4) திருமதி. பிரபாவதி (1 தாள்), 5) திருமதி.வித்யா (1 தாள்), 6) திரு.பிரபு(1 தாள்)

மற்றும் 7) திரு.பிச்சைமுத்து (1 தாள்). 6) 13.12.2024-ம் தேதி பதிவு செய்யப்பட்ட ஆவணங்களின் விவரம் (5 தாள்கள்). 7) சான்றொப்பம் இட்ட அலுவலர்களின் வருகைப்பதிவேடு-டிசம்பர் 2024 (2 தாள்கள்). 8) சான்றொப்பம் இட்ட DEO & IPCO வருகைப் பதிவேடு- டிசம்பர் 2024 (2 தாள்கள்) 9) சான்றொப்பம் இட்ட தன் பதிவேடு- நடப்பு எண்.1227 முதல் 1236 வரை (3 தாள்கள்) 10) சான்றொப்பம் இட்ட அலுவலர்களின் பண கையிருப்பு பதிவேடு 11.12.2024 முதல் 13.12.2024 வரை (2 தாள்கள்) 11) சான்றொப்பம் இட்ட கையிருப்பு பணப்பதிவேடு DEO & IPCO 10.12.2024 முதல் 13.12.2024 வரை (2 தாள்கள்) 12) சான்றொப்பம் இட்ட தாமத வருகை பதிவேடு 13.12.2024 (2 தாள்கள்) 13) சான்றொப்பம் இட்ட இயக்கப்பதிவேடு 23.11.2024 முதல் 10.12.2024 வரை (2 தாள்கள்) 14) சான்றொப்பம் இட்ட முன்பதிவு வரிசை எண்.19 (D 519) பதிவு செய்த நாள்.12.12.2024 (7 தாள்கள்), 15) சான்றொப்பம் இட்ட முன்பதிவு வரிசை எண்.25 (D125) பதிவு செய்த நாள்.11.12.2024 (8 தாள்கள்), 16) சான்றொப்பம் இட்ட முன்பதிவு வரிசை எண்.24 (D124) பதிவு செய்த நாள்.11.12.2024 (21 தாள்கள்), 17) சான்றொப்பம் இட்ட முன்பதிவு வரிசை எண்.18 (D418) விண்ணப்பதாரர் பெயர் ஏழுமலை பதிவு செய்த நாள்.12.12.2024 (21 தாள்கள்). 18) சான்றொப்பம் இட்ட முன்பதிவு வரிசை எண்.9 (D509) பதிவு செய்த நாள்.09.12.2024 விண்ணப்பதாரர் பெயர் ஸ்ரீவித்யா (19 தாள்கள்), 19) சான்றொப்பம் இட்ட ரசீது எண்.22739/2024 ஆவண எண்.R/கூடுவாஞ்சேரி -புத்தகம்-1/19818/2024, நாள்.12.12.2024 (14 தாள்கள்). (ஓம்) (K.வீரமணி), தனி வட்டாட்சியர் (நி.எ), நெடுஞ்சாலைகள் அலகு-4, செங்கல்பட்டு, மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் காஞ்சிபுரம், செங்கல்பட்டு மற்றும் திருவள்ளூர் மாவட்டங்கள் இருப்பு காஞ்சிபுரம் அவர்களின் கடித எண்.ந.க.269-2024-அ நாள் 13.12.2024-ன்படி செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) அவர்களின் செயல்முறைகள் முன்னிலை திரு.சே.காஜா சாகுல் உறமீது ந.க.எண்.1136-2024-அ1 நாள் 13.12.2024-ன்படி K.வீரமணி, தனி வட்டாட்சியர் (நி.எ), நெடுஞ்சாலைகள் அலகு-4, செங்கல்பட்டு ஆகிய என்னை செங்கல்பட்டு காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறையினர் மற்றும் வருவாய்த் துறை சார்பாக வட்டாட்சியர் நிலையில் இருதுறை கூட்டாய்வு செய்ய நியமித்ததின் பெயரில் ஏற்படுத்திய செயல்முறைகள். முன்னிலை- திரு.K.வீரமணி, தனி வட்டாட்சியர் (நி.எ), நெடுஞ்சாலைகள் அலகு-4, செங்கல்பட்டு பொறுப்பு துணை ஆய்வுக் குழு அலுவலர். பொருள்:-இருதுறை திடீர் கூட்டாய்வு - கூடுவாஞ்சேரி - சார்-பதிவாளர் அலுவலகத்தில் 13.12.2024 அன்று திடீர் கூட்டாய்வு மேற்கொள்ளப்பட்டது - தொடர்பான செயல்முறைகள். ஆணை:- செங்கற்பட்டு மாவட்டம், கூடுவாஞ்சேரி சார்பதிவாளர் அலுவலகத்தில், ஆவண பதிவிற்கு வரும் பொது மக்களிடமிருந்து, லஞ்சமாக அதிகப்படியான பணம் வசூலிப்பதாக தொடர்ந்து கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில், ரகசியமாக கண்காணிக்கப்பட்டதில் அவ்வாறு தெரிய வரவே செங்கற்பட்டு மாவட்டம், கூடுவாஞ்சேரி சார்பதிவாளர்

அலுவலகத்தில். இன்று 13.12.2024-ம் தேதி மாலை சுமார் 3.35 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்ட இரு துறை திடீர் கூட்டாய்வின்போது நடைபெற்ற நிகழ்வின் விவரம் வருமாறு. இன்று 13.12.2024-ந்தேதி மாலை சுமார் 3.35 மணியளவில் இரு துறை கூட்டாய்வு செய்வதற்கு கூடுவாஞ்சேரி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்றபோது. மேற்குறிப்பிட்ட அலுவலகமானது தாம்பரம் - செங்கற்பட்டு செல்லும் தேசிய நெடுஞ்சாலையின் இடதுபுறம் உள்ள நெல்லிக்குப்பம் செல்லும் சாலையின் வலது புறம் அமைந்துள்ள டிபென்ஸ் காலனி செல்லும் சாலையின் இடது புறம் மேற்கு பார்த்து அமைந்துள்ளது. அந்த அலுவலகத்திற்குள் பார்ட்டி சகிதம் மெயின் கேட்டினை கடந்து உள்ளே சென்றபோது. இருபுறமும் தனி நபர்கள் அமரும் சிமெண்டால் ஆன இருக்கைகள் அமைந்துள்ளது. முன்னால் வரான்டா அதனை ஒட்டியவாறு தென் புறம் கழிப்பறைகள் அமைந்துள்ளது. வாரன்டாவை கடந்தபிறகு முன்னால் பத்திர பதிவிற்கு வரும் நபர்கள் அமரும்வண்ணம் Stainless Steel-லால் ஆன இருக்கைகள் அமைந்துள்ளது. ஹாலை ஒட்டியவாறு வடபுறம் உள்ளே செல்லும் நுழைவாயில் அமைந்துள்ளது. நுழைவாயிலை கடந்த பிறகு கிழக்கு பார்த்தவாறு சார் பதிவாளர் அமரும் நாற்காலி மேஜை கணினிகள் உள்ளது. சார் பதிவாளர் இருக்கையில் சார் பதிவாளர் நிலை-I திரு.வைத்தியலிங்கம் அவர்களும். அவரது இடது பக்கத்தில் மேஜை கணினியுடன் உதவியாளர் திரு.மதன் குமார் என்பவரது இருக்கையும். சார் பதிவாளர் இருக்கைக்கு முன் பக்கம் இடது புறம் தெற்கு பார்த்தவாறு Data Entry Operator திருமதி.S.பிரபாவதி என்பவர் அமரும் இருக்கையும். அவரது இருக்கைக்கு அருகில் உதவியாளர் (Training) S.அபிராமி என்பவரது இருக்கையும். மேற்படி அறை plywood தடுப்பால் அமைக்கப்பட்டுள்ளது. அதற்கு எதிரே Data Entry Operator V.வித்யா என்பவரது இருக்கை அறை plywood தடுப்பால் அமைக்கப்பட்டுள்ளது. Data Entry Operator அறைக்கு அடுத்தவாறு அலுவலக உதவியாளர் திரு.பிச்சைமுத்து என்பவரது அறை plywood தடுப்பால் அமைக்கப்பட்டுள்ளது. அதனை ஒட்டியவாறு தெற்கு நோக்கி செல்லும் நுழைவாயில் அமைந்துள்ளது. நுழைவாயிலுக்கு ஒட்டியவாறு கிழக்கு பார்த்தவாறு ஒரு அறையும். அந்த அறைக்குள் கிழக்கு பார்த்தவாறு மற்றொரு அறையும் உள்ளது. இந்த அறைக்கு எதிரே பெண்கள் கழிப்பறை அதனை ஒட்டி ஆண்கள் கழிப்பறை மேற்கு பார்த்தவாறு உள்ளது. சார் பதிவாளர் இருக்கைக்கு எதிரே கண்ணாடி மற்றும் Plywood தடுப்பால் கணினி அறை அமைந்துள்ளது. கணினி அறையில் Camera Operator திரு.பிரபு என்பவர் இருந்தார். சார் பதிவாளர் இருக்கைக்கு வடக்கே பதிவறை அமைந்துள்ளது. சார் பதிவாளர் நிலை-I திரு.வைத்தியலிங்கம் என்பவரிடம் நான் என்னை அறிமுகம் செய்துக் கொண்டும் மேலும் என்னுடன் உதவிக்கு வந்த செங்கல்பட்டு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவின் காவல் துணை கண்காணிப்பாளர் திரு.S.சரவணன். காவல் ஆய்வாளர் திரு.G.அண்ணாதுரை அவர்களையும் மற்ற காவல் ஆளினர்களான சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.V.கதிர்வேல், தலைமைக்காவலர்கள் திரு.தினேஷ் வினோ (த.கா.663) மற்றும்

பெ.த.கா.1381 திருமதி.பூங்கொடி ஆகியோர்களை அறிமுகப்படுத்தி வைத்து. அனைவரது அடையாள அட்டையை காண்பித்தும். அவரவர்களை அவர் முன்பு சுயபரிசோதனை செய்தும் காண்பிக்கப்பட்டது. அலுவலகத்தில் கீழ் குறிப்பிட்ட அலுவலர்கள் ஆஜரில் இருந்தனர் அவர்களின் விவரம் மற்றும் கையிருப்பு பண பதிவேட்டின் விவரம் மற்றும் அவர்கள் வைத்திருந்த வைப்புத் தொகை பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

| வ. எண் | ஆஜரில் இருந்த அலுவலக ஆளிநர்கள் | வைத்திருந்த பணம் | பணக் கையிருப்பு பதிவேட்டின் விவரம் | குறிப்புரை |
|---|---|---|---|---|
| 1. | திரு.V.வைத்தியலிங்கம் வ/46 சார் பதிவாளர் நிலை-I, சார்பதிவாளர் அலுவலகம். கூடுவாஞ்சேரி, செங்கல்பட்டு மாவட்டம். | ரூ.900/- | ரூ950/- | பணக் கையிருப்பு பதிவேட்டில் ரூ.950/- என குறிப்பிடப்பட்டுள்ளது. அவர் கைவசம் ரூ.900/- வைத்திருந்தார். ரூ.50 காலை உணவிற்காக செலவு செய்ததாக தெரிவித்தார். அவர் கூறிய விளக்கம் ஏற்றுக் கொள்ளப்பட்டு அவரது பணம் ரூ.900/- திருப்பி அவரிமே வழங்கப்பட்டது. |
| 2, | திரு.A.மதன் குமார் வ/33 த/பெ.ஆசைதம்பி உதவியாளர், சார்பதிவாளர் அலுவலகம். கூடுவாஞ்சேரி, செங்கல்பட்டு மாவட்டம். | ரூ.520/- | ரூ.520/- | இரு தொகையும் குறிப்பிட்டவாறு காணப்பட்டதால் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. |
| 3, | திருமதி.S.அபிராமி. வ/31 த/பெ. V.சேகர். உதவியாளர் (Training), சார்பதிவாளர் அலுவலகம். கூடுவாஞ்சேரி, செங்கல்பட்டு மாவட்டம். | ரூ.165/- | ரூ.165/- | இரு தொகையும் குறிப்பிட்டவாறு காணப்பட்டதால் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. |
| 4. | திரு.A.பிச்சைமுத்து. வ-58, த/பெ. அர்சுனன், அலுவலக உதவியாளர், சார்பதிவாளர் அலுவலகம். கூடுவாஞ்சேரி, செங்கல்பட்டு மாவட்டம். | ரூ.100/- | ரூ.100/- | இரு தொகையும் குறிப்பிட்டவாறு காணப்பட்டதால் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. |
| 5. | திரு.V.வித்யா, வ/40 க/பெ பாஸ்கர், Data Entry Operator (TCS). சார்பதிவாளர் அலுவலகம். கூடுவாஞ்சேரி, செங்கல்பட்டு மாவட்டம். | ரூ.500/- | ரூ.500/- | இரு தொகையும் குறிப்பிட்டவாறு காணப்பட்டதால் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. |
| 6. | திரு.S.பிரபு வ/30 த/பெ. சர்க்கரை Camera Operator (TCS). சார்பதிவாளர் அலுவலகம். கூடுவாஞ்சேரி, செங்கல்பட்டு மாவட்டம். | ரூ.900/- | ரூ.900/- | இரு தொகையும் குறிப்பிட்டுவாறு காணப்பட்டதால் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. |
| 7. | திரு.S.பிரபாவதி வ/48 க/பெ. சிவகுமார், Data Entry Operator (TCS). சார்பதிவாளர் அலுவலகம். | ரூ.2400/- | ரூ.3000/- | பணக் கையிருப்பு பதிவேட்டில் ரூ.3000/- என குறிப்பிடப்பட்டுள்ளது. அவர் கைவசம் ரூ.2400/- |

| | | | | |
|---|---|---|---|---|
| | கூடுவாஞ்சேரி, செங்கல்பட்டு மாவட்டம். | | | வைத்திருந்தார். மீதிப் பணம் ரூ.600 மதிய உணவிற்காக செலவு செய்ததாக தெரிவித்தார். அவர் கூறிய விளக்கம் ஏற்றுக் கொள்ளப்பட்டு அவரது பணம் ரூ.2400/- திருப்பி அவரிமே வழங்கப்பட்டது. |

மேலும், சார் பதிவாளர் இருக்கையின் எதிரில் இடது புறத்தில் அமைந்துள்ள Data Entry Operator திருமதி.பிரபாவதி இருக்கை முன் உள்ள கேபின் வெளியில் கணக்கில் வராத பணம் ரூ.60,000/- காக்கி கவரில் காணப்பட்டது. இது குறித்து திருமதி.பிரபாவதியிடம் விசாரிக்க தனக்கு எதுவும் தெரியாது என்று கூறினார். இது குறித்து சார் பதிவாளர் நிலை-I திரு.வைத்தியலிங்கம் என்பவரிடம் கேட்க தனக்கு எதுவும் தெரியாது என்று கூறினார். மேற்படி பணம் ரூ.60,000/- சார் பதிவாளர் நிலை-I அவருக்கு லஞ்சப் பணமாக கொடுக்க வந்த பணம் என கருதி மேலும் இது குறித்து அலுவலக திடீர் கூட்டாய்வின் போது இருந்த தனி நபர்களும் மேற்படி பணம் குறித்து உரிமை கோராததாலும் கைப்பற்றப்பட்டது. மேலும், சார் பதிவாளர் இருக்கைக்கு எதிரே வலது புறத்தில் உள்ள திரு.பிச்சைமுத்து என்பவரது அறைக்கு ஒட்டியவாறு தெற்கு நோக்கி செல்லும் நுழைவாயிலுக்கு ஒட்டியவாறு கிழக்கு பார்த்தவாறு இருந்த Dining Hall-ல் முன் பக்கம் இருந்த குப்பை தொட்டியில் கணக்கில் வராத பணம் ரூ.37,000/- காணப்பட்டது. இது குறித்து சார்பதிவாளர் மற்றும் திரு.பிச்சைமுத்து என்பவரிடம் கேட்டபோது, அப்பணம் குறித்து தங்களுக்கு எதுவும் தெரியாது என்று தெரிவித்ததால், அப்பணத்தை லஞ்சமாக பார்ட்டிகளிடம் பெற்று மறைத்து வைத்திருக்கலாம் என கருதி அப்பணத்தை கணக்கில் வராத பணமாகவும், பொது மக்களிடமிருந்து லஞ்சமாக பெற்ற பணமாக கருதி மேலும் இப்பணம் குறித்து யாரும் உரிமை கோராததாலும் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அலுவலகத்தில் திடீர் கூட்டாய்வின்போது கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தனிநபர்களும் அவர்கள் வைத்திருந்த பண விவரம் மற்றும் பணம் வைத்திருந்ததற்காக கொடுக்கப்பட்ட விளக்கம் பின்வரும் பட்டியலில் கொடுக்கப்பட்டுள்ளது.

| வ. எண். | ஆஜரில் இருந்த தனி நபர்களின் விவரம் | வைத்திருந்த இருப்புத்தொகை | பணத்திற்கான விளக்கம் | குறிப்புரை |
|---|---|---|---|---|
| 1. | திரு.S.சரவணன், வ/39 த/பெ. சுவாமிநாதன், 2/52 9 வது தெரு, ராகவா நகர், மடிப்பாக்கம், சென்னை-91, 7397456999 | ரூ.1,65,200/- | அவர் வைத்திருந்த பணம் ரூ.1,65,200/- குறித்து விளக்கம் கேட்டபோது, அவர் அந்த பணத்திற்கான விவரங்களை சரிவர தெரிவிக்கவில்லை. | இவர் DSLEV கம்பெனியில் பார்ட்னராக வேலை பார்த்து வருவதாகவும், கூடுவாஞ்சேரியில் உள்ள தன்னுடைய flat ஐ செந்தில் என்பவருக்கு விற்பனை செய்வதற்காக கூடுவாஞ்சேரி சார் பதிவாளர் அலுவலகத்திற்கு வந்ததாகவும், தான் வைத்திருந்த பணம் ரூ.1,65,200/- குறித்து விளக்கம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | கேட்டபோது. கம்பெனி பணம் என்றும். இது குறித்து விளக்கம் கேட்க எவ்விதமான ஆவணங்களையும் ஒப்படைக்காததாலும். மேலும் சரியான விளக்கம் கூறாததாலும் இப்பணம் சார் பதிவாளருக்கு லஞ்சமாக கொடுக்க வந்த பணம் என கருதி விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும். மேற்படி நபர் 10.00 மணி முதல் 11.00 மணிக்குள் ஆவண பதிவு செய்வதற்காக முன் பதிவு வரிசை எண்.24 ஆக பதிவு செய்து பத்திர பதிவிற்கு உண்டான Stamp Duty ரூ.2.09.000/- Registration Fee ரூ.60.000/- Computer Fee ரூ.700/- CD Fees ரூ.100/- DW Welfare Fee ரூ.10 என கூடுதல் ரூ.2.69,810/- 12.12.2024 அன்று ஆன் லைனில் செலுத்தப்பட்டு மேற்படி ஆவணமானது பதிவிற்காக சார் பதிவாளரால் பெறப்பட்டு பதியப்படாத நிலையில் உள்ளது. மேலும் முன் பதிவு வரிசை எண்.19 முன் பதிவு நேரம் 14.00 மணி முதல் 15.00 மணிக்குள் ஆவண பதிவு செய்வதற்காக திரு.சரவணன் என்பவர் Indian Bank மடிபாக்கம் கிளையில் ரூ.25.00.000/- கடன் பெற்று செலுத்திய நிலையில் மேற்படி வங்கி கடனை பெற்றுக் கொண்டதற்காக ஏற்படுத்தப்பட்ட ரசீது ஆவணமாகும். இதற்கு Registration Fee ரூ.200/- Computer Fee ரூ.200/- CD Fees ரூ.100/- DW Welfare Fee ரூ.10 என கூடுதல் ரூ.510/- 13.12.2024 அன்று ஆன் லைனில் திரு.சரவணன்னால் செலுத்தப்பட்டு உள்ளது. மேற்படி ஆவணம் பதிவிற்கு சார் பதிவாளரால் அனுமதிக்கப்பட்டு நிலுவையில் இருந்ததாலும். சரவணன் என்பவர் வைத்திருந்த ரூ.1,65,200/- பணம் லஞ்சமாக வைத்திருந்த பணம் என கருதி கைப்பற்றப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| 2, | திரு.செந்தில் பிளாட் எண்.73, F2 முதல் தளம், ராகவேந்திரா அப்பார்ட்மெண்ட், பவானியம்மன் கோயில் தெரு, அருள் நகர், கூடுவாஞ்சேரி. 9790739117 | ரூ.6570/- | தனது அன்றாட செலவிற்கு வைத்திருந்ததாக தெரிவித்தார். | மேற்படி வரிசை எண்.1-ல் சொன்ன சரவணன் என்பவரிடமிருந்து Flat வாங்கி இடத்தை பதிவு செய்வதற்கு சார் பதிவாயளர் அலுவலகம் வந்ததாக தெரிவித்தார். அவர் வைத்திருந்த பணம் குறித்த விளக்கம கேட்டபோது அவர் தனது அன்றாட செலவிற்காக வைத்திருந்ததாக தெரிவித்தார். அவர் கூறிய விளக்கம் ஏற்றுக் கொள்ளும்படி இருந்ததால் பணம் திரும்ப கொடுக்கப்பட்டது. |
| 3, | திரு.S.குமரேசன், எண்.263 கிழக்கு தெரு, ஆதங்கோட்டை, ஒரத்தநாடு, தஞ்சாவூர். 9094662629 | - | பணம் ஏதும் வைத்திருக்கவில்லை. | மேற்படி வரிசை எண்.1-ல் சொன்ன சரவணன் என்பவரிடமிருந்து இடம் வாங்க வந்த செந்தில் என்பவருக்கு சாட்சியாக கையொப்பமிட சார் பதிவாளர் அலுவலகம் வந்ததாக தெரிவித்தார். |
| 4. | திரு.K.கிருபாகரன், எண்.7 அஸ்வின் நகர், குத்தனூர், மாடம்பாக்கம், கூடுவாஞ்சேரி 603202 9790955123 | - | பணம் ஏதும் வைத்திருக்கவில்லை. | மேற்படி வரிசை எண்.1-ல் சொன்ன சரவணன் என்பவரிடமிருந்து இடம் வாங்க வந்த செந்தில் என்பவருடன் துணையாக கூட வந்ததாக தெரிவித்தார். |
| 5, | திரு.பா.விமலநாதன், வ/53 த/பெ பார்த்தசாரதி, எண்.16 கன்னியப்பன் நகர், கூடுவாஞ்சேரி 603202 7358452089 | ரூ.2,00,000/- | அவர் வைத்திருந்த பணத்திற்கு விளக்கம் முன்னுக்கு பின் முரணாக ஆவணங்னையை பரிசீலனை செய்ததில் தெரியவந்ததால் பணம் கைப்பற்றப்பட்டது. | இன்று விமலநாதன் என்பவரை விசாரணை செய்ய சுகுனா மற்றும் கீதா என்பவரிடம் வாங்கிய வீடு அடமான கடன் ரூ.7,00,000/-த்திற்கு வட்டி பணம் கொடுப்பதற்காக பணம் ரூ.2,00,000/- வைத்திருந்ததாக தெரிவித்தார்.<br>மேலும், T-8 காவல் நிலையத்தில் சுமங்கலி க/பெ விமலநாதன் என்பவர் விசாரணையின்போது அளித்த வாக்குமூலத்தின் நகலினை ஒப்படைத்தார். இதை பரிசீலனை செய்ததில் 17.12.2024-ம் தேதி ஆன்லைன் மூலம் அசல் மற்றும் வட்டி தொகை ரூ.9,00,000/-ஐ செலுத்தி 18.12.2024 அன்று பத்திரம், ரத்து செய்து விடுவதாக பேசி முடித்து சமாதானமாக செல்கிறோம் என உள்ளது.<br>மேலும் மகாலட்சுமி என்பவரின் Axis Bank வங்கி கணக்கின் Statement 16.11.2024 முதல் 13.12.2024 வரை உள்ளதை ஒப்படைத்தார். அதை பரிசீலனை செய்ததரில் 13.12.2024 அன்று ரூ.3,50,000/- |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | ஆக இரண்டு தடைவ RTGS -ல் செலுத்தப்பட்டதாக உள்ளது. மேலும், சுமங்கலி என்பவர் காவல் ஆய்வாளர், கூடுவாஞ்சேரி காவல் நிலையத்தில் சுகுணா மற்றும் கீதா என்பவரிடம் கடன் பெற்ற விவரம் வட்டி செலுத்திய விவரம் குறித்து புகார் அளித்த நகலை ஒப்படைத்தார். ரசீது ஆவண எண்.19818/2024 திருமதி.A.சுகுணா மற்றும் திருமதி.V.கீதா ஆகியோர் திரு.விமலநாதன் என்பவருக்கு கடனாக பெற்ற ஏழு லட்சம் RTGS மூலமாக தலா 3,50,000/- இருவரும் பெற்றுக் கொண்டதாகவும், வட்டி தொகையானது மாதம் மாதம் பெற்றுக் கொண்டதாகவும் எழுதப்பட்ட ஆவணமானது இன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. எனவே அவர் கொடுத்த விளக்கம் முன்னுக்கு பின் முரணாக உள்ளதாலும் மேலும் இந்த ஆவணத்தை அவர் பெறாததாலும் மேற்படி அவர் வைத்திருந்த பணம் லஞ்சமாக சார் பதிவாளருக்கு கொடுப்பதற்காக கொண்டு வந்திருந்த பணம் என கருதி விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. |
| 6, | திருமதி.A.சுகுணா அம்பேத்கார் நகர், துலுக்கானத்தம்மன் கோயில் தெரு, கூடுவாஞ்சேரி. 9884678419, | - | பணம் ஏதும் வைத்திருக்கவில்லை. | இன்று சார் பதிவாளர் அலுவலகத்தில் விமலநாதன் என்பவருக்கு எழுதி கொடுத்த வீடு அடமான பத்திரத்தை ரத்து செய்வதற்காக வந்ததாக தெரிவித்தார். |
| 7, | திருமதி.V.கீதா, க/பெ வாசுதேவன், எண்.14 கன்னியப்பன் நகர், கூடுவாஞ்சேரி. 9176422456 | - | பணம் ஏதும் வைத்திருக்கவில்லை. | இன்று சார் பதிவாளர் அலுவலகத்தில் விமலநாதன் என்பவருக்கு எழுதி கொடுத்த வீடு அடமான பத்திரத்தை ரத்து செய்வதற்காக வந்ததாக தெரிவித்தார். |
| 8, | திருமதி.V.சுமங்கலி க/பெ விமலநாதன் எண்.16 கன்னியப்ப நகர், கூடுவாஞ்சேரி 7358452089 | - | பணம் ஏதும் வைத்திருக்கவில்லை. | இன்று தனது கணவர் விமலநாதன் உடன் வந்ததாக கூறினார். |

| | | | | |
|---|---|---|---|---|
| 9, | V.மகாலட்சுமி. த/பெ. விமலநாதன் எண்.16 கன்னியப்ப நகர். கூடுவாஞ்சேரி 7358452089 | - | பணம் ஏதும் வைத்திருக்கவில்லை. | தனது அப்பா விமலநாதன் என்பவருக்கு துணையாக வீடு அடமான பத்திரத்தை ரத்து செய்வதற்கு சார் பதிவாளர் அலுவலகத்திற்கு வந்ததாக தெரிவித்தார். |
| 10, | திரு.மு.மகேஸ் வீரன். வ/39 த/பெ முருகன், M.S.No. 2225/2018 எண்.92 முதல் தளம். குபேரன் நகர். கூடுவாஞ்சேரி 603202, 9629575052 | - | பணம் ஏதும் வைத்திருக்கவில்லை. | இவர் தான் வழக்கறிஞராக பணிபுரிந்து வருவதாகவும். வீடு அடமான கடன் பத்திரத்தை ரத்து செய்வதற்கு விமலநாதன் என்பவருடன் சார் பதிவாளர் அலுவலகம் வந்ததாக தெரிவித்தார். |
| 11, | திரு.சே.ராஜசேர் வ/37 த/பெ சேகர், எண்.16 ராஜிவ் காந்தி நகர். நந்திவரம். கூடுவாஞ்சேரி 7806870205. | - | பணம் ஏதும் வைத்திருக்கவில்லை. | இவர் தான் வழக்கறிஞராக பணிபுரிந்து வருவதாகவும். வீடு அடமான கடன் பத்திரத்தை ரத்து செய்வதற்கு திருமதி.கீதா மற்றும் சுகுணா என்பவருடன் சார் பதிவாளர் அலுவலகம் வந்ததாக தெரிவித்தார். |
| 12, | திரு.S.வெங்கடேஷ். வ/27 த/பெ. சங்கு எண்.14 F-1 பழனியப்பா தெரு. MGR நகர். வேளச்சேரி. 9176675329 | ரூ.71,600/- | | இவர் ஆன்ரூ என்பவரிடமிருந்து வாங்கிய வேங்கடமங்கலத்தில் உள்ள நிலத்தினை பத்திர பதிவு செய்வதற்கு சார் பதிவாளர் அலுவலகம் வந்ததாக தெரிவித்தார். அவர் வைத்திருந்த பணம் ரூ.71,600/- குறித்து கேட்டபோது அவர் MOD Charges மற்றும் பதிவு கட்டணம் ஆக ஆன்ரூ அவர்களால் ஏற்கனவே தனக்காக ஆன்லைனில் செலுத்தப்பட்ட பணம் ரூ.33,310/- திரும்ப அவருக்கு வழங்குவதற்காகவும். மற்றும் Documentation Charges ஆக வழக்கறிஞருக்கு வழங்குவதற்காக ரூ.25,000/-மும், மீதமுள்ள ரூ.13,290/- தன்னுடைய போக்குவரத்து மற்றும் திடீர் தேவைக்கு வைத்திருந்ததாக தெரிவித்தார். அவர் கூறிய விளக்கம் ஏற்றுக் கொள்ளப்பட்டு மேற்படி பணம் ரூ.71,600/- திரும்ப அவரிடம் வழங்கப்பட்டது. |
| 13, | திரு.ஆன்ரூ வ/43 த/பெ ராஜ்குமார், எண்.31/12 ராமாணுஜம் தெரு. சைதாபேட்டை. சென்னை-15 9884028829 | ரூ.6000/- | தனது கை செலவிற்காக வைத்திருந்ததாக தெரிவித்தார். | இவர் தன்னுடைய நிலத்தை வெங்கடேஷ் என்பவருக்கு விற்பனை செய்ததை பத்திர பதிவு செய்வதற்கு சார் பதிவாளர் அலுவலகம் வந்ததாகவும். தான் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | வைத்திருந்த பணம் ரூ.6000/- குறித்து அவரிடம் விளக்கம் கேட்டபோது அவர் தான் எப்போதும் தனது கைசெலவிற்கு பணம் வைத்திருப்பதாக கூறினார். அவரது விளக்கத்தை ஏற்று அவர் வைத்திருந்த பணம் ரூ.6000/- அவரிடமே திரும்ப கொடுக்கப்பட்டது. |
| 14. | திரு.R.பழனி<br>த/பெ. ராதாகிருஷ்ணன்.<br>எண்.G-4 அச்சு அபார்ட்மெண்ட். அசோக் நகர். தயாளன் தெரு. அண்ணா நகர்.<br>பம்மல் 600085.<br>9677967763 | ரூ.6,500/- | தனது சொந்த செலவிற்கும் போக்குவரத்து செலவிற்கும் வைத்திருந்ததாக தெரிவித்தார். | இவர் தனது நண்பர் திரு.சாதிக்பாஷா அவர்களின் MOD Token No/27 (D327) பத்திர பதிவிற்கு சாட்சியாக இருக்க சார் பதிவாளர் அலுவலகத்திற்கு வந்ததாக தெரிவித்தார். அவர் வைத்திருந்த பணம் ரூ.6500/- பற்றி கேட்டபோது அவர் தனது சொந்த செலவிற்கும் போக்குவரத்து செலவிற்கும் வைத்திருந்ததாக தெரிவித்தார். அவர் கூறிய விளக்கம் ஏற்றுக் கொள்ளப்பட்டு அவர் வைத்திருந்த பணம் ரூ.6500/- திரும்ப அவரிடமே கொடுக்கப்பட்டது. |
| 15, | திரு.அரவிந்தன்,<br>இந்தியன் வங்கி .<br>காஞ்சிபரம்<br>9786826493 | ரூ.11,000/- | தனது கை செலவிற்கு வைத்திருந்ததாக தெரிவித்தார். | இவர் இந்தியன் வங்கியில் வீட்டு கடன் பிரிவில் பணிபுரிவதாகவும். வாடிக்கையாளரின் MOD செய்வதற்கு அவருடன் சார் பதிவாளர் அலுவலகம் வந்ததாக தெரிவித்தார். அவர் வைத்திருந்த பணம் ரூ.11,000/- குறித்து கேட்டபோது அவர் தனது செலவிற்காக வைத்திருந்ததாக கூறினார். அவர் கூறிய விளக்கம் ஏற்றுக் கொள்ளப்பட்டு அவர் வைத்திருந்த பணம் ரூ.11,000/- திரும்ப அவரிடமே கொடுக்கப்பட்டது. |
| 16, | திரு.M.சாதிக் பாட்சா<br>எண்:84/2 பிளாட் எண்.4 பேஸ் 2. கொலப்பாக்கம். சென்னை -122<br>9543019996. 9543419991 | ரூ.22,500/- | தனது வீட்டு கட்டிட செலவிற்கும் போக்குவரத்து செலவிற்கும் வைத்திருந்ததாக தெரிவித்தார். | இவர் தன்னுடைய MOD Bank Loan பிரிமியர் பைனான்ஸ் நிறுவனத்திடம் கேன்சல் செய்வதற்காகவும். மீண்டும் இந்தியன் வங்கியில் லோன் வாங்குவதற்காக Token No/27/D327 கூடுவாஞ்சேரி சார் பதிவாளர் அலுவலகத்திற்கு வந்ததாக தெரிவித்தார். அவர் வைத்திருந்த பணம் ரூ.22,500/- குறித்து கேட்டபோது அவர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | தனது வீட்டு கட்டிட செலவிற்கும், போக்குவரத்து செலவிற்கும் வைத்திருந்ததாக கூறினார். அவர் கூறிய விளக்கம் ஏற்றுக் கொள்ளப்பட்டு அவர் வைத்திருந்த பணம் ரூ.22,500/- திரும்ப அவரிடமே கொடுக்கப்பட்டது. |
| 17. | திரு.அந்தோனி அருளப்பன் எண்.1/147 சுப்பிரமணியபுரம் தெரு, வேம்பர், தூத்துக்குடி. 9677418110 | ரூ.6880/- | தனது கார், ஆட்டோ, பஸ் மற்றும் உணவு செலவிற்காக வைத்திருந்ததாக கூறினார். | இவர் தன்னுடைய நிலத்தை திரு.ஜான் பாலன், நாசரேத் என்பவருக்கு கிரயம் செய்ய கூடுவாஞ்சேரி சார் பதிவாளர் அலுவலகத்திற்கு வந்ததாக தெரிவித்தார். அவர் வைத்திருந்த பணம் ரூ.6880/- குறித்து கேட்டபோது அவர் தனது கார், ஆட்டோ, பஸ் மற்றும் உணவு செலவிற்காக வைத்திருந்ததாக கூறினார். அவர் வைத்திருந்த விளக்கம் ஏற்றுக் கொள்ளப்பட்டு அவர் வைத்திருந்த பணம் ரூ.6880/- திரும்ப அவரிடமே கொடுக்கப்பட்டது. |
| 18. | திருமதி.S.சரண்யா ராணி, க/பெ செல்வம், எண்.22 தர்மதோட்டம், இரும்புலியூர் மேற்கு, தாம்பரம்-45 9600145543 | ரூ.18,800/- | தனது சொந்த செலவிற்கு கொண்டு வந்ததாக கூறினார். | இவர் தன்னுடைய அண்ணன் பத்திர பதிவிற்காக சாட்சி கையொப்பம் போட வந்ததாக கூடுவாஞ்சேரி சார் பதிவாளர் அலுவலகம் வந்ததாக கூறினார். அவர் வைத்திருந்த பணம் ரூ.18,800/- குறித்து கேட்டபோது அவர் தனது செலவிற்காக வைத்திருந்ததாக தெரிவித்தார். அவர் கூறிய விளக்கம் ஏற்றுக் கொள்ளப்பட்டு மேற்படி பணம் திரும்ப அவரிடமே கொடுக்கப்பட்டது. |
| 19. | திரு.ஜான் பாலன் கென்னடி, எண்.66A டேனியல் தெரு, நாசரேத், தூத்துக்குடி மாவட்டம். 9443973461 | ரூ.14,300/- | தனது குடும்பத்திற்கு கிறிஸ்துமஸ் Purchase-க்கு பணம் வைத்திருந்ததாக கூறினார். | இவர் திரு.அந்தோனி என்பவரிடம் கூடுவாஞ்சேரி நந்திவரம் பிளாட் எண்.59-ல் இடம் வாங்க கூடுவாஞ்சேரி சார் பதிவாளர் அலுவலகம் வந்ததாக கூறினார். அவர் வைத்திருந்த பணம் ரூ.14,300/- குறித்து கேட்டதற்கு அவர் தனது குடும்பத்திற்கு கிறிஸ்துமஸ் பர்ச்சேஸ்க்கு பணம் வைத்திருந்ததாக கூறினார். அவர் கூறிய விளக்கம் ஏற்றுக் கொள்ளப்பட்டு மேற்படி பணம் திரும்ப அவரிடமே கொடுக்கப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| 20. | திரு.சுந்தரமூர்த்தி<br>எண். 7 பிள்ளையார் கோயில் தெரு.<br>புகக்கத்துரை.<br>மதுராந்தகம்.<br>உத்திரமேரூர்.<br>9444142412 | ரூ.5200/- | தனது கைசெலவிற்கு வைத்திருந்ததாக கூறினார். | இவர் தான் பைல் ஒன்றை கொடுக்க கூடுவாஞ்சேரி சார் பதிவாளர் அலுவலகத்திற்கு வந்ததாக கூறினார். அவர் வைத்திருந்த பணம் ரூ.5200/- குறித்து கேட்டதற்கு அவர் தனது கைசெலவிற்கு வைத்திருந்ததாக தெரிவித்தார். அவர் கூறிய விளக்கம் ஏற்றுக் கொள்ளப்பட்டு மேற்படி பணத்தை திரும்ப அவரிடமே கொடுக்கப்பட்டது. |
| 21. | திரு.பாலு.<br>த/பெ வரதன்<br>எண்.5/10, 3வது மெயின் ரோடு, புது ஓட்டேரி விரிவு. வண்டலூர்.<br>சென்னை -48<br>7710449525 | ரூ.14,00,000/- | தான் வீடு கட்டுவதற்கு வங்கியில் இருந்து எடுத்து வந்ததாக கூறினார். | தனது மனைவி ஸ்ரீவித்யா பெயரில் புதிய மனை வாங்கி அதனை பதிவு செய்வதற்கு கூடுவாஞ்சேரி சார் பதிவாளர் அலுவலகம் வந்ததாக கூறினார். தான் வைத்திருந்த பணம் ரூ.14,00,000/- குறித்து கேட்டபோது அவர் தனது மனைவி பெயரில் வாங்கிய இடத்தில் வீடு கட்டுவதற்கு HDFC வங்கியில் இருந்து ரூ.5,50,000/- மற்றும் City Union வங்கியில் இருந்து ரூ.9,00,000/- எடுத்து வைத்திருந்ததாக தெரிவித்தார். இது தொடர்பாக ஸ்ரீவித்யா என்பவரது பெயரில் உள்ள வங்கி பரிவர்த்தனை ஆவணம் ஒப்படைத்தார். அவர் கூறிய விளக்கம் ஏற்றுக் கொள்ளப்பட்டு மேற்படி பணம் ரூ.14,00,000/- திரும்ப அவரிடமே கொடுக்கப்பட்டது. |
| 22. | திரு.அப்துல் ஜப்பர்.<br>எண்.36,37 தூலை விநாயகர் கோயில் தெரு. மன்னடி.<br>சென்னை.<br>9840160328 | பணம் இல்லை | - | இவர் பாலு என்பவரது மனைவி திருமதி.ஸ்ரீவித்யா என்பவருக்கு கிரையம் செய்து கொடுக்க சார் பதிவாளர் அலுவலகம் வந்ததாக தெரிவித்தார். இவர் பணம் ஏதும் கையில் வைத்திருக்கவில்லை. மேலும் ஸ்ரீவித்யா என்பவருக்கு இடம் விற்ற தொகையாக ரூ.26,40,000/- கனரா வங்கி ரசீது ஒப்படைத்தார். |
| 23. | திரு.ஏழுமலை வ/45<br>த/பெ ராமன்.<br>எண்.39/1 பெரிய தெரு கூத்தம்பட்டு கிராமம். கண்டவராட்டி போஸ்ட். வந்தவாசி.<br>திருவண்ணாமலை மாவட்டம்.<br>9750138197 | ரூ.8,30,000/- | தான் இடம் வாங்குவதற்கு பணம் வைத்திருந்ததாக தெரிவித்தார். | இவர் படப்பை ஆரம்பாக்கம் கிராமத்தில் ஸ்ரீ கற்பக விநாயக நகர் மனை எண்.48-ல் 1500 சதுரடி கொண்ட இடத்தை நில உரிமையாளர்கள் திரு.அலெக்ஸான்டர் மற்றும் ஸ்டாலின் ஆகியோர்களிடம் வாங்கியதை பதிவு செய்வதற்காகவும். நில உரிமையாளர்களுக்கு கிரைய தொகையான வழிக்காட்டி மதிப்பு |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | ஏற்கனவே செலுத்திவிட்ட படியாலும் மார்கெட் மதிப்பு தொகையை கொடுக்க கொண்டு வந்ததாகவும் கூறினார். மேலும், ஆவணங்களை பரிசீலனை செய்ததில் பத்திர பதிவிற்கு உண்டான Stamp Duty ரூ.13.000/- Registration Fee ரூ.18.000/- Computer Fee ரூ.1200/- CD Fees ரூ.100/- DW Welfare Fee ரூ.10 என கூடுதல் ரூ.32.310/- 12.12.2024 அன்று ஆன் லைனில் செலுத்தப்பட்டு பத்திர பதிவு செய்து முடிக்கப்பட்டுள்ளது. மேற்படி அவர் வைத்திருந்த பணம் குறித்து அவர் அளித்த விளக்கம் ஆவணங்கள் அடிப்படையில் ஏற்றுக் கொள்ளப்பட்டு அவர் வைத்திருந்த பணம் ரூ.8.30.000/- திரும்ப அவரிடமே கொடுக்கப்பட்டது. |

கைப்பற்றப்பட்ட பணத்தின் விவரம் வருமாறு.

| வ.எண். | பணம் கைப்பற்றப்பட்ட நபரின் பெயர் விலாசம் | தனிநபர்/புரோக்கர்/அலுவலர் | கைப்பற்றபட்ட தொகையின் விவரம் |
|---|---|---|---|
| 1. | திரு.S.சரவணன், வ/39 த/பெ. சுவாமிநாதன், 2/52 9 வது தெரு, ராகவா நகர், மடிப்பாக்கம், சென்னை-91, 7397456999 | தனி நபர் | ரூ.1,65,200/- (500x319=1,59,500/- 100x57 = 5,700/-) |
| 2. | திரு.பா.விமலநாதன், வ/53 த/பெ பார்த்தசாரதி, எண்.16 கன்னியப்பன் நகர், கூடுவாஞ்சேரி 603202 7358452089 | தனி நபர் | ரூ.2,00,000/- (500x400= 2,00,000/-) |
| 3. | அலுவலகத்தில் Data Entry Operator திருமதி.பிரபாவதி என்பவரின் இருக்கைக்கு எதிரில் இருந்த கேபின் வெளியில் இருந்து கண்டெடுக்கப்பட்ட கணக்கில் வராத பணம் | - | ரூ.60,000/- (500x120= 60,000/-) |
| 4. | அலுவலக டைனிங் ரூமில் இருந்த குப்பை தொட்டியில் கண்டெடுக்கப்பட்ட கணக்கில் வராத பணம் | - | ரூ.37,000/- (500x74= 37,000/-) |
| | | மொத்தம் | ரூ.4,62,200/- |

மேற்குறிப்பிட்ட தொகை ரூ.4,62,200/- (ரூ.500X913 நோட்டுகள் மற்றும் ரூ.100X57 நோட்டுகள்) என மொத்தம் நான்கு லட்சத்து அறுபத்து இரண்டாயிரத்து இருநூறு ரூபாய் பணத்திற்கு பொறுப்பு சார்பதிவாளரோ, அலுவலகத்தில் பணியிலிருந்த அலுவலர்களோ மற்றும் பணம் வைத்திருந்தவர்களோ அதற்கான சரியான முகாந்திரம் கூறாததால், அனைத்தும் சார்பதிவாளர் அவர்களுக்கு கையூட்டாக கொடுக்க கொண்டு வரப்பட்ட பணம் என கருதி கைப்பற்றப்பட்டது. இன்று 13.12.2024-ந்தேதி

காலையிலிருந்து சார்பதிவாளர் திரு.வைத்தியலிங்கம் அவர்களால் 89 ஆவணங்கள் பதியப்பட்டுள்ளது. 1) 13.12.2024-ம் தேதி பதிவு செய்யப்பட்ட ஆவணங்களின் விவரம் (5 தாள்கள்). மேலும், அலுவலகத்தில் இருந்த பதிவேடுகளில், 2) அலுவலர்களின் வருகைப்பதிவேடு-டிசம்பர்/2024 (2 தாள்கள்), 3) DEO & IPCO வருகைப் பதிவேடு-டிசம்பர் 2024 (2 தாள்கள்), 4) தன் பதிவேடு- நடப்பு எண்.1227 முதல் 1236 வரை (3 தாள்கள்), 5) அலுவலர்களின் பண கையிருப்பு பதிவேடு 11.12.2024 முதல் 13.12.2024 வரை) (2 தாள்கள்), 6) கையிருப்பு பணப்பதிவேடு DEO & IPCO 10.12.2024 முதல் 13.12.2024 வரை (2 தாள்கள்), 7) தாமத வருகை பதிவேடு 13.12.2024 (2 தாள்கள்), 8) இயக்கப்பதிவேடு 23.11.2024 முதல் 10.12.2024 வரை (2 தாள்கள்) ஆகியவற்றின் நகல்கள் எடுக்கப்பட்டு சார்பதிவாளர் அவர்களால் சான்றொப்பம் செய்யப்பட்டு விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேற்குறிப்பிட்ட நகல்களில் நானும் சான்றொப்பம் செய்து மேல் விசாரணைக்காக கைப்பற்றினேன். மேலும் அலுவலகத்திலிருந்து விசாரணைக்காக நகல் எடுத்து கைப்பற்றப்பட்ட சான்றொப்பமிட்ட ஆவணங்களின் விவரம் 1) முன்பதிவு வரிசை எண்.19 (D 519) பதிவு செய்த நாள்.12.12.2024 (7 தாள்கள்), 2) முன்பதிவு வரிசை எண்.25 (D125) பதிவு செய்த நாள்.11.12.2024 (8 தாள்கள்), 3) முன்பதிவு வரிசை எண்.24 (D124) பதிவு செய்த நாள்.11.12.2024 (21 தாள்கள்), 4) முன்பதிவு வரிசை எண்.18 (D418) விண்ணப்பதாரர் பெயர் ஏழுமலை பதிவு செய்த நாள்.12.12.2024 (21 தாள்கள்), முன்பதிவு வரிசை எண்.9 (D509) பதிவு செய்த நாள்.09.12.2024 விண்ணப்பதாரர் பெயர் ஸ்ரீவித்யா (19 தாள்கள்), ரசீது எண்.22739/2024 ஆவண எண்.R/கூடுவாஞ்சேரி -புத்தகம்-1/19818/2024, நாள்.12.12.2024 (14 தாள்கள்). மேற்படி கூட்டாய்வின் போது “லஞ்சம் வாங்குவதும் கொடுப்பதும் குற்றம்” என்ற அறிவிப்பு பலகை இல்லை. மேலும், இக்கூட்டாய்வின்போது பணம் கைப்பற்றப்பட்ட நபர்களை விசாரித்தும், அலுவலக ஆஜரில் இருந்த பொறுப்பு சார்பதிவாளர் மற்றும் அலுவலக ஊழியர்கள் அவரவர்களது விளக்கங்களை எழுத்து மூலமாக தனித்தனியாக எழுதி கொடுத்துள்ளனர். தனி நபர்களை விசாரணை முடித்து, மீண்டும் விசாரணையின் போது ஆஜராகுமாறு அறிவுறுத்தி அனுப்பிவைக்கப்பட்டனர். இந்த இரு துறை திடீர் கூட்டாய்வு இன்று 13.12.2024 தேதி மாலை 03.35 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு 14.12.2024 -ம் தேதி அதிகாலை 01.00 மணிக்கு முடிக்கப்பட்டது.

1. (ஓம்) திரு.V.வைத்தியலிங்கம்
வ/46 சார் பதிவாளர் நிலை-1,
சார்பதிவாளர் அலுவலகம்,
கூடுவாஞ்சேரி, செங்கல்பட்டு
மாவட்டம்.

2. (ஓம்) திரு.A.மதன் குமார்
வ/33 த/பெ.ஆசைதம்பி
உதவியாளர்,
சார்பதிவாளர் அலுவலகம்,
கூடுவாஞ்சேரி, செங்கல்பட்டு
மாவட்டம்.

3. (ஓம்) திருமதி.S.அபிராமி, வ/31
த/பெ. V.சேகர்,
உதவியாளர் (Training),
சார்பதிவாளர் அலுவலகம்,
கூடுவாஞ்சேரி, செங்கல்பட்டு
மாவட்டம்.

4. (ஓம்) திரு.A.பிச்சைமுத்து, வ-58, த/பெ. அர்சுனன், அலுவலக உதவியாளர், சார்பதிவாளர் அலுவலகம், கூடுவாஞ்சேரி, செங்கல்பட்டு மாவட்டம்.

5. (ஓம்) திரு.V.வித்யா, வ/40 க/பெ பாஸ்கர், Data Entry Operator (TCS). சார்பதிவாளர் அலுவலகம், கூடுவாஞ்சேரி, செங்கல்பட்டு மாவட்டம்.

6. (ஓம்) திரு.S.பிரபு வ/30 த/பெ. சர்க்கரை Camera Operator (TCS). சார்பதிவாளர் அலுவலகம், கூடுவாஞ்சேரி, செங்கல்பட்டு மாவட்டம்.

7, (ஓம்) திரு.S.பிரபாவதி வ/48 க/பெ. சிவகுமார், Data Entry Operator (TCS). சார்பதிவாளர் அலுவலகம், கூடுவாஞ்சேரி, செங்கல்பட்டு மாவட்டம்.

8. (ஓம்) திரு.S.சரவணன், வ/39 த/பெ. சுவாமிநாதன், 2/52 9 வது தெரு, ராகவா நகர், மடிப்பாக்கம், சென்னை-91,

9. (ஓம்) திரு.பா.விமலநாதன், வ/53 த/பெ பார்த்தசாரதி, எண்.16 கன்னியப்பன் நகர், கூடுவாஞ்சேரி 603202

10. (ஓம்) திரு.கதிர்வேல், சிறப்பு உதவி ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, செங்கல்பட்டு.

11. (ஓம்) திருமதி.பூங்கொடி, பெ.த.கா.1381 ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு செங்கல்பட்டு.

12. (ஓம்) திரு.தினேஷ் வினோ, த.கா.663, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு செங்கல்பட்டு.

13. (ஓம்) திரு.G.அண்ணாதுரை காவல் ஆய்வாளர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு செங்கல்பட்டு.

14, (ஓம்) திரு.S.சரவணன், துணை காவல் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு செங்கல்பட்டு.

15. (ஓம்) திரு.K.வீரமணி, தனி வட்டாட்சியர் (நி.எ), நெடுஞ்சாலைகள் அலகு-4, செங்கல்பட்டு பொறுப்பு துணை ஆய்வுக் குழு அலுவலர்.

ஐயா,

மேலே கண்ட புகாரினைப் பெற்று, உயரதிகாரிகளிடம் உரிய அனுமதி பெற்று செங்கல்பட்டு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கு.எண்.5/AC/CP பிரிவு 106 BNSS மற்றும் 7, 7A PC Act Amendment 2018 ஆக இன்று 14.12.2024 / 06.00 மணிக்கு வழக்கு பதிந்து விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன் அசல் முதல் தகவல் அறிக்கை, புகார் மற்றும் செயல்முறை ஆணை, மேலும் அதனுடன் இணைக்கப்பட்ட ஆவணங்கள், Form-91 (த.பி.பா) எண்: I 0563763 நாள்: 14/12/2024 ஆகியவற்றை கனம் மாண்புமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் தனி நீதிபதி, செங்கல்பட்டு நீதிமன்றத்திற்கும் ஏனைய நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பப்பட்டது. ஓம். (S.Saravanan), 14/12/24 Deputy Superintendent of Police, Vigilance and Anti-Corruption, Chengalpattu 603 001.

14/12/24

Deputy Superintendent of Police
Vigilance and Anti - Corruption
Chengalpattu - 603 001.